STR-2-TA

# வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின புத்தகம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிரவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை  தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னரிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீதிருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். வெளிப்படுத்தல் புத்தகத்தில் இருக்கும் சுவார்சயமான தலைப்பை குறித்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏன் கிறிஸ்தவர்கள் இதை புரிந்து கொள்வது அதிக கடினமாக இருக்கிறது? எந்த வாக்குத்தத்தங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

எதிர்காலத்தை குறித்த எந்தமாதிரியான விஷயங்களை அவர் நமக்கு இதில் வெளிப்படுத்துகிறார்? நம்முடைய சிறப்பு விருந்தினரை தவிர வேறு யாரும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளை மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் விளக்கிட முடியாது அவர்தான், டாக்டர். ஜிம்மி டியோங், அவர் ஒரு பத்திரிக்கையாளர் 1993 லிருந்து இஸ்ரேலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் எல்லா பிரதமர்களோடும் பேசியிருக்கிறார், அந்த நாளிலிருந்து, இருக்கும் பிரதமர்களை அறிந்தவர். மத்திய கிழக்கின் மற்ற முக்கிய நபர்களையும் அறிந்தவர். அவர் ஒரு தீர்க்கத்தரிசன பண்டிதர். அவர் வேதத்தை புரட்டி ஆராய்ந்தவர். அதனால், ஜிம்மி, மறுபடியுமாக இதை தொடர்ந்திட விரும்புகிறேன், அருமையான உதாரணங்களோடு விளக்கிகொண்டிருக்கிறீர்கள், துரிதமாக வெளிப்படுத்தின விசேஷத்தை பார்த்திடலாம். அதோடு நாம் இயேசு கிறிஸ்துவின் தன்மையை குறித்து பார்க்க இருக்கிறோம், வெளிப்படுத்தலின் கடிதங்களில் இன்றைக்கு தம்மை அவர் நமக்கு எப்படி வெளிப்படுத்துகிறார். சரி, இப்போது வெளிப்படுத்தின விசேஷத்தை பார்க்கலாம்.

**Dr. ஜிம்மி டியோங்**: இங்க 3 தூண்கள் இருக்கு ஜான். இவை வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் தேவனுடைய கால அட்டவணைப்படி நிகழவிருக்கும் 3 முக்கிய நிகழ்வுகளை எடுத்துரைக்கிறது. இவைகளுக்கு முன்பான முதல் காரியம் அதிகாரம் 1,2,3ல் இருக்கிறது. இது நான்காம் அதிகாரத்தின் முதல் வசனம். இது சபை எடுத்துக்கொள்ளப்படுவதாகும். இயேசு முழங்குகிறார், பிரதான தூதன் முழங்குகிறார், தேவ எக்காளம் முழங்குகிறது, அவரோடு நாம் எடுத்துக்கொள்ளப்படுவோம். அந்த நிகழ்விற்கும் அடுத்த நிகழ்விற்கும் இடையில் ஏழு வருடங்கள் இருக்கிறது. இது உலகத்திற்கு கொடூரமான நியாயதீர்ப்பின் நாட்களாக இருக்கும். அதை தான் உபத்திரவ காலம் என்கிறோம்.

இந்த குறிப்பிட்ட தூண் எதை குறிக்கிறதென்றால், இதுதான் 3 தூண்களில் இரண்டாவதாக இருக்கிறது, இயேசுகிறிஸ்து பூமிக்கு திரும்பி வருவதை கூறுகிறது, இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாடு. மேலும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, அவர் எருசலேம் பட்டணத்தின் ஒலிவ மலையில் இறங்கி வருவார் என்றிருக்கிறது. அதன் பிறகு ஆயிர வருட அரசாட்சியின் காலம் துவங்கிடும். சாத்தான் ஆயிரவருடம் கட்டப்பட்டவனாக இருப்பான். இயேசுகிறிஸ்து அப்போது தமது ராஜ்யத்தை அரசாளுகிறவராக இருப்பார், தேவமைந்தன், அந்த ஆயிர வருடம் அரசான்றிடுவார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் பார்க்கும் 3 முக்கிய நிகழ்வுகளில் கடைசி நிகழ்வுதான் வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு. அப்போது இயேசு கிறிஸ்துவே நியாயாதிபதியாக இருப்பார். அவரே நீதிவழங்கிடுவார் – இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்கள், பின்மாற்றமடைந்தவர்கள் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு உட்படுவார்கள். யாருடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் இல்லையோ அவர்கள் அனைவரும் – அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள் அங்குதான் சாத்தானும்,

அந்திகிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரியும் இருப்பான் என்பதில் மாற்றமில்லை. அதற்கு பிறகு, நித்தியநித்தியமாக இருக்கும், புதிய வானம், புதிய பூமி மற்றும் புதிய எருசலேம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இந்த ஒவ்வொரு தலைப்பிற்கும் இசைவாக இருக்கும் அதிகாரங்களின் எண்ணிக்கையின் வரிசையில் சொல்லுங்கள், ஏனென்றால் இந்த 15 அதிகாரங்களும் ஒரு சிறிய பாகத்தை தான் மையப்படுத்துகிறது.

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், இது நான்காம் அதிகாரம், வசனம் 1, சபை எடுத்துக்கொள்ளப்படுதல். மேலே ஏறி வா என்று சொல்லும் எக்காள தொனியின் சத்தத்தை இங்கு யோவான் கேட்கிறார். அதோடு 19ம் அதிகாரம், வசனம் 11 இயேசுகிறிஸ்து மீண்டும் பூமிக்கு வருவதை பற்றி கூறுகிறதாயிருக்கிறது. அவர் வெள்ளை குதிரையின் மேல் வருகிறார், அவரோடு பரலோகத்தில் இருக்கும் நாமும், எடுத்துக்கொள்ளப்படுதலில் அவரோடு சென்றவர்கள், நாமும் அந்த வெள்ளை குதிரைகளின் மீது ஏறி, எருசலேமிற்கு திரும்பிடுவோம். இந்த 1000 வருட காலத்தை பற்றி 20ம் அதிகாரம் 1-6 வசனங்களில் பார்க்கிறோம். மேலும் இந்த 20ம் அதிகாரத்தின், 11-15 வசனங்களில், வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பும் சொல்லப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். சரி, இப்ப முதலிலிருந்து பார்க்கலாம். முதலில் இயேசுகிறிஸ்துவின் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது அதன் பிறகு தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் பூமியின் மீது வரவிருக்கும் நியாயதீர்ப்பும் சொல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை பற்றிய வெளிப்பாட்டை குறித்து இப்போது பார்க்கலாம். அவர் தம்மைக்குறித்து எதை நமக்கு வெளிப்படுத்துகிறார்?

**Dr. ஜிம்மி டியோங்**: அவர் நியாயாதிபதியாக வருவதை வெளிப்படுத்துகிறார், ஜான். முதலாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவின் தன்மைகளை நாம் பார்க்கிறோம். நீங்களும் நானும் தலை நரைத்தவர்களாக கருதப்படுகிறோம். வெல், உண்மை இதுதான், இயேசுகிறிஸ்துவை, யோவான் பார்த்தபோது அவருடைய, முடி வெண்மையாகவும், அவரது பரிசுத்தம் வெளிப்படுத்த, பட்டிருப்பதையும் கண்டார். அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையை போலிருந்தது. வேதாகமத்தில் பல இடங்களில் நடக்கும் அனைத்தையும் இயேசுகிறிஸ்து பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்பது தெளிவாக எடுத்துரைக்கிறது. அவருடைய சத்தம் பெருவெள்ள இரைச்சலை போன்றது. இந்த பிரபஞ்சத்தை நிஜத்திர்க்கு கொண்டுவந்த அதே சத்தம் எடுத்துக்கொள்ளப்படுதலில் நம்மை அவரோடு வரும்படியாக அழைக்கும் சத்தமாகும். ஆனால் இதே சத்தம்தான் ஒருகட்டத்தில், “உன்னை எனக்கு, தெரியாது என்றிடும். என்னைவிட்டு நித்திய நரகத்திற்கு போங்கள் என்று உரைத்திடும்.” அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த, பிரகாசமான வெண்கலம் போலிருந்தது, அவர் நியாயாதிபதியாக வருகிறார் என்பதை சித்தரிகிறது. அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது. மேலும், அவரை நாம், பார்க்கும்போது தனது, வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக்கொண்டிருக்கிறார், நினைவிருக்கட்டும் 1ம் அதிகாரத்தின் 20 வசனம் கூறுகிறது

அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம், அந்த ஏழு பொன் குத்துவிளக்குகளும் ஏழு சபைகளை குறிக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** யா. மேலும் அவர், "நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன் என்கிறார்." இதை பார்க்கும்போது அனைவருக்கும் வாழ்வளிக்கும்படி இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளவராக இருக்கிறார் என்பது உறுதியாகிறது. தன்னிடம் பரலோகம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்கள் இருப்பதாக கூறுகிறார்.

**Dr. ஜிம்மி டியோங்**: எல்லாவற்றிர்க்கும், நம்முடைய விசுவாசத்தின் மூலைக்கல் 1ம் அதிகாரம் 18ம் வசனம் தான். இயேசு இங்க தனது சாட்சியை சொல்கிறார், "மரித்தும் உயிரோடிருக்கிறவர் நானே. மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்." அவர் தன்னை யார் என்று சொன்னாரோ அவராகவே இருப்பது நிருபணமாகிறது. அவர் தாம் செய்வதாக சொன்ன யாவற்றையும் செய்திடுவார் என்பதும் நிரூபனமாகிறது. நம்மெல்லாருக்கும் அவர் ஜீவனை அளிக்கிறார், ஏனென்றால் அவர் உயிர்த்தெழுந்திருக்கிறார். இது நம்முடைய விசுவாசத்தின் மூலைக்கல் மட்டுமல்ல, ஆனால், ஜான், இதுதான் வேதத்தின் தீர்க்கதரிசனங்களுக்கு அஸ்திபாரமாகும். உயிர்த்தெழுந்த இயேசு மட்டுமே எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை சொல்ல தகுதிபெற்றவராக இருக்கிறார். அதோடு, அவர், வருகையில் என்ன செய்வார் என்பதை 1ம் அதிகாரம் 19ம் வசனம் கூறுகிறது. யோவானிடம் சொல்லுகிறார், " நீ கண்டவைகளையும் எழுது, இருக்கிறவைகளையும் எழுதிடு இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைகளையும் எழுதிடு என்றார்."

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு, இயேசுகிறிஸ்து சபைகளுக்கு சொன்ன கடைசி வார்த்தைகள் சுவிஷேங்களிலோ பவுலின் நிருபங்களிலோ காணப்படவில்லை, அவை இந்த வெளிப்படுத்தலில் தான் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஏழு சபைகளுக்கான ஏழு கடிதங்கள் நமக்கும் பொருந்துவதாக இருக்கிறது. அது எப்படி, என்பதை பற்றி இப்ப சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: அந்த ஏழு சபைகளுக்கான ஏழு கடிதங்களும் இன்றைய கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு மிகவும் அவசியமானவை. நாம் மேய்ப்பனின் நிருபங்களை பற்றி பார்த்தோம். நீங்க 1 தீமோத்தேயு மற்றும் 2 தீமோத்தேயுவில் பவுலின் வார்த்தைகளை குறித்து கூறினீர்கள், அதை கவனிக்கும் போது, அப்போஸ்தலனாகிய பவுல், சபை எப்படி இருக்க வேண்டுமென்கிறார். ஆனால் இயேசுகிறிஸ்து நேரடியாக சபையிடம் பேசுகிறார். இந்த ஒவ்வொரு சபையின் தூதனிடம் அவர் பேசுகிறார். இன்னொரு விஷயம் என்னன்னா, அந்த வார்த்தைக்கு கிரேக்கத்தில் ஏஞ்செல்லோஸ் என்பதாகும். அது போதகர்கள் அல்ல, இந்த சபைகளின் தூதனுக்கு கூறுகிறார். நினைவிருக்கட்டும் 1 கொரிந்தியர் 11ன்படி தூதர்களும் ஒவ்வொரு சபை ஆராதனையில் பங்குபெறுகின்றனர். அவர் செய்தியை அளிக்கிறார், இந்த காரியம் ஏழு சபைகளுக்கும் பொருந்தும். அவரே அந்த தூதர்களுக்கு இந்த செய்திகளை கொடுப்பதோடு, அவர்

தம்மை பற்றி அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார், அதைதான் முதலாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவின் தன்மைகளாக பார்த்தோம். ஏழு சபைகளோடும் பேசும்போது, அவர், “உன் கிரியைகளை அறிவேன் என்கிறார்.” அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையை போன்றது. ஒவ்வொரு சபையையும் அவர்கள் செய்வதையும் அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** யா. அதை குறித்து ஒரு சில நிமிடங்கள் கூறுகிறேன். வெளிப்படுத்தல் 2:9, சிமிர்னா சபைக்கு சொல்கிறார். ஒரு சில காரியங்களை பார்க்கலாம்: “உன் உபத்திரவத்தையும் உன் தரித்திரத்தையும் நான் அறிந்திருக்கிறேன்.” சர்தை சபைக்கு அவர் சொல்லுகிறார், “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் உண்மையில் செத்தவனாயிருக்கிறாய்.”பிலதெல்பியா சபைக்கு சொல்லும்போது அவர் சொல்கிறார், “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தை கைகொண்டாய்.” சபைகளுக்குள் என்ன நடக்கிறது என்பதை இயேசு அறிந்திருக்கிறார். ஆனா நமக்கு இது எப்படி பொருந்தும், ஜிம்மி?

**Dr. ஜிம்மி டியோங்**: நீங்க 1 மற்றும் 2ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, இந்த 7 சபைகளுக்கும் அவர் சொல்லும் காரியங்களை நீங்கள் புரிந்துகொள்வீர்கள், 5 சபைகளை அவர் கண்டிக்கிறார், 2 சபைகளை பாராட்டி பேசுகிறார், சிமிர்னா சபையையும், பிலதெல்பியா சபையையும். பிலதெல்பியாவை குறித்து சொல்லும்போது, அவர்களிடம் கொஞ்சம் பெலன் இருந்தது, ஆனாலும் அவர்கள் தேவ வார்த்தையின் அதிகாரத்தில் நின்றதால் அவர்கள், இந்த உலகத்தை இயேசு கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினார்கள். அதற்கு அடுத்த சபையான லவோதிக்கேயாவை பார்த்தால், அங்கு அவர், “நீ குளிருமின்றி, அனலுமின்றி, வெதுவெதுப்பாயிருக்கிறாய். உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிபோடுவேன் என்கிறார்.”

எனவே இந்த கடிதங்களில் அவர் என்ன சொல்லுகிறாரோ, அதை இன்றைய சபைகளுக்கு சொல்லுகிறார் – அதாவது அவர், இந்த சபைகளில் இருக்கும் ஒவ்வொருவருக்கும், 7 வித்தியாசமான நபர்களுக்கு – அவர் சொல்லுவதாவது, “விழித்திடுங்கள்! இதுதான் உங்களுடைய நிலை. உங்களை பற்றி எனக்கு தெரிந்த விஷயங்கள் இதுதான்.” அதோடு அவர், “ ஒருவேளை நீ மனந்திரும்பாவிட்டால்,” வேறுவிதமாக சொன்னால், முற்றிலும் திரும்பி, வேறு திசையில் போ என்று, 5 சபைகளை எச்சரித்து, “உன் விளக்கு தண்டை அகற்றிடுவேன் என்கிறார்.” மேலும் ஒவ்வொரு கடிதத்தையும் முடிக்கும்போது அவர், “காதுள்ளவன் எவனோ” ஏழு சபைக்கும் சொல்கிறார், “காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனுக்கு பலன் இருக்கிறது ” – சரி, 1 யோவான் 5:4ன்படி ஜெயங்கொள்ளுகிறவன் என்பவன், இயேசுகிறிஸ்துவை தனது தெய்வமாக சொந்த இரட்சகராக எற்றுக்கொண்டிருப்பான் – ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மிக அருமையான வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். எபேசு சபைக்கு சொல்லும்போது

2:7ல் அவர், “தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்க கொடுப்பேன் என்கிறார்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், அப்படின்னா அவை உண்மையான ஏழு சபைகள், வரலாற்று சபைகள், இருப்பினும் அவை ஏழு வித்தியாசமான காரியங்களை குறிக்கிறது, இன்றைக்கு, நாம் பார்க்கும் சபைகள் போல, ஏழு விதமான வகையினரை, கொண்டிருக்கும், இன்றைய நாட்களின் கிறிஸ்தவ சபைகள்.

**Dr. ஜிம்மி டியோங்**: அதுதான் சரி, அதனால் தான் இந்த இரண்டு அதிகாரங்களும் தனிப்பட்ட நபருடைய வாழ்வில் அத்தியாவசியமானது. வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்த இரண்டு அதிகாரங்களில் நேரத்தை செலவிடுகிறவர்கள் நிச்சயம் எழுப்புதலை பெற்றிடுவார்கள். போதகர்களுக்கு என்னுடைய ஆலோசனை, இதை 7 வார தொடர் செய்தியாக கொடுத்திடுங்கள். அது போதிக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். வெளிப்படுத்தலின் முதல் பகுதியில், இயேசு கிறிஸ்துவின் தன்மை விளக்கப்பட்டிருக்கிறதை பார்க்கிறோம். அது சாதுவான மென்மையான இயேசு அல்ல, என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொண்ட இயேசுவாக இருக்கிறார் அவர் நியாயாதிபதியாக வந்திடுவார். அதோடு இங்கு சபைகளுக்கான கடிதங்கள் இருக்கிறது இவை இன்றைய சபைகளுக்கு ஏற்ற அறிவுரைகளை அளிக்கிறது, எப்படி வாழவேண்டும் என்று கூறுகிறது. அடுத்ததாக ஒரு இடைவேளை எடுக்க இருக்கிறோம். இடைவேளைக்கு பிறகு, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு பிறகு உடனடியாக நடக்க இருக்கும் முதல் 7 நியாயதீர்ப்புகளை பற்றி பார்க்க இருக்கிறோம் 7 முத்திரைகளின் நியாயதீர்ப்பு. எனவே, நீங்க, எங்கையும் போகவேண்டாம். திரும்ப வந்ததும் அதை குறித்து பார்த்திடலாம்.

****

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். மீண்டும் வருக. நாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது டாக்டர் ஜிம்மி டியோங்குடன் வெளிப்படுத்தலை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் நடக்கும் என்று வேதம் கூறுகிற முதல் கட்ட நியாயதீர்ப்பை குறித்து பார்க்க இருக்கிறோம். சரி, ஜிம்மி, மறுபடியுமாக ஒருமுறை கால அட்டவனையை பற்றி சொல்லி இந்த நியாயதீர்ப்பு எப்போது நடக்கும் என்பதை சொல்லுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: சரி, சென்ற பகுதியில், ஜான், அதிகாரம் 2 மற்றும் 3ல் சொல்லப்பட்ட ஏழு சபைகளுக்கான கடிதங்களை பற்றி பார்த்தோம். நான்காம் அதிகாரத்தின் முதல் வசனம் இங்கு இருக்கும் இந்த தூணைக் குறிக்கிறது. அதுதான் சபை எடுத்துக்கொள்ளப்படுதல். இயேசு நம்மை அவரோடு இருக்கும்படி அழைக்கிறார்.

அதன்பிறகு நான்காம் அதிகாரத்தின் 2ம் வசனம் முதல் 19ம் அதிகாரத்தின் 10ம் வசனம் வரை, 16 அதிகாரங்களும் உபத்திரவ காலத்தை பற்றி விளக்கமாக எடுத்துரைக்கிறது, அதற்கு பிறகு 19ம் அதிகாரம் 11ம் வசனத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை, கிறிஸ்துவின் வெளிப்படுதல் மீண்டும் பூமிக்கு வருகிறார். 20ம் அதிகாரம் 1-6 வசனங்கள், ஆயிரவருட அரசாட்சி அப்போது சாத்தான் கட்டப்பட்டிருப்பான் இயேசுகிறிஸ்து எருசலேமில் அவருடைய சிங்காசனத்தை அமைத்து அங்கிருந்து ஆளுகை செய்திடுவார்.

எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு பிறகு சம்பவிக்கும் காரியங்களை நாம் பார்க்கும்போது, 5ம் அதிகாரத்தில் பார்க்கிறோம், மூன்றாம் வானத்தில் சிங்காசனம் இருக்கும் அறை இருக்கிறது. பிதாவாகிய தேவன் தமது கரத்தில் ஒரு சுருளை பிடித்திருக்கிறார். மூப்பர்களில் ஒருவர் கூறுகிறார், “இந்த புத்தகத்தின் முத்திரையை உடைப்பவர் யார்? “அதற்கு வேறொருவர் சொல்கிறார், “இயேசுதானே தகுதியானவர்? அவர் பரிசுத்தர், தூயவர், பாவமில்லாதவர்.” இதுதான் உலகிற்கு கொடுக்கப்படும் பத்திர வார்த்தைகள். அதைதான் தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுத்திடுவார், இந்த பூமியையும் பூமியில் இருப்பவர்களையும் கீழ்ப்படியப்பண்ணும் படிக்கு சுருள் போன்ற புத்தகத்தின் ஏழு முத்திரைகளையும் உடைத்திடுவார், அதினிமித்தம் பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவுக்கு இந்த பூமியின் ராஜ்யத்தை அளித்திடுவார்.

இப்போதும் ஏழு ஆண்டு காலத்தை பற்றி பார்க்கலாம், இதில் முதலாவதாக இயேசு முத்திரையிடப்பட்ட புத்தகத்தை எடுத்து முதல் முத்திரையை உடைக்கிறார். ஆறாம் அதிகாரம் முதல் வசனம் வெள்ளை குதிரையின் மேலுள்ள நபரை வெளிப்படுத்துகிறது. அவருடைய தலையில் கிரீடம் இருந்தது, கையில் வில் இருந்தது – அதில் அம்புகள் கிடையாது – வெள்ளை குதிரையில் ஏறியிருந்தார், அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான். அது இயேசுகிறிஸ்துவை குறிக்கிறது என்பது பலருடைய கருத்து, ஏனென்றால் அவர் வெள்ளை குதிரையின் மேல் ஏறிவருவார் என்று சொல்லியிருந்தீர்கள். சரி, இதை கவனியுங்கள். அதனால் தான் வெளிப்படுத்தலில் இருக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் திறவுகோல்களாக இருக்கிறது, ஜான். இப்ப சபை எடுத்துக்கொள்ளப்பட்ட மறு வினாடியில் நிற்கிறேன். இப்போதுதான் இந்த முத்திரைகள் துவங்குகிறது, முதல் மூன்றரையாண்டுகள். இயேசுகிறிஸ்து எடுத்துக்கொள்ளப்படுதளுக்கு பின்பு ஏழு வருடங்கள் கழித்துதான் வெள்ளை குதிரையின்மேல் ஏறி பூமிக்கு வருவார்.

இந்த தனிநபர் தான் அந்திகிறிஸ்து. சரி, 27 பெயர்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கட்டும். தானியேலின் புத்தகத்தின் ஏழாவது அதிகாரத்தில் சிறிய கொம்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. 9ம் அதிகாரத்தில், வரப்போகிற பிரபு என்றிருக்கிறது. தானியேலின் 11ம் அதிகாரத்தில், தன் இஷ்டப்படி செய்பவன். வெளிப்படுத்தல் 13ம் அதிகாரத்தில், சமுத்திரத்தில் இருந்து எழும்பின மிருகம் அது வணங்கப்பட்டதாக இருந்தது, ஜனங்கள் விற்கவும் கொள்ளவும் அவனுடைய நாமத்தை வலது கையிலாவது நெற்றிகளிலாவது முத்திரையாக பெற்றிருக்க வேண்டியதாக இருக்கும். அந்திகிறிஸ்து தான் முதல் முத்திரை, வெள்ளை குதிரையில் வருவான், அவன்தான் இயேசு என்பதை

நிரூபிக்க நினைத்து தன்னால் இயன்ற அனைத்தையும் செய்திடுவன், மேசியாவாக கண்பித்திடுவான்.

சரி, அம்புகள் இல்லாத வில் அவன் கரத்தில் இருப்பதை கவனியுங்கள். வேதம் கூறுகிறது, அதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன், இந்த வெளிப்படுத்தல் புத்தகமானது 500 வெவ்வேறு விதங்களில் வேதத்தின் மற்ற புத்தகங்களோடு தொடர்புகொண்டிருக்கிறது, வசனங்களை கொண்டுள்ளது, அவை பெரும்பாலும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகங்களிலும், புதிய ஏற்பாட்டிலும் சில இடங்களில் உள்ளது. வேதத்தை முழுமையாக தெரிந்துகொள்ளாமல் வெளிப்படுத்தின விசேஷத்தை புரிந்துகொள்ள முடியாதென்பதற்கு இதுவே ஆதாரம். 9ம் அதிகாரம் 27ம் வசனம் சொல்கிறது அந்திகிறிஸ்து தோன்றுவான், அதாவது இந்த, தானியேல் புத்தகத்தின் 9ம் அதிகாரம், 27ம் வசனம், அந்த ஏழு ஆண்டு காலத்தை விவரிக்கிறது. பாழாக்குகிறவன், அந்திகிறிஸ்து, அவன் ஸ்தானத்தில் நிற்பான், அவன் புதுபிக்கப்பட்ட ரோம ராஜ்யத்திலிருந்து வருவான். அது இன்றையகால ஐரோப்பிய ஐக்கிய நாடுகளுக்கு ஒப்பாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

அப்படி, இருக்கலாம் என்று சொன்னேன். வசனத்தை என்னுடைய கோட்பாட்டில் என்னால் விவரிக்க முடியாது. அதாவது புதுப்பிக்கப்பட்ட ரோம ராஜ்யத்தின் உள்கட்டமைப்பு ஐரோப்பிய ஐக்கிய நாடுகளில் இருந்துதான் நடக்கிறது. அந்த ரோம சாம்ராஜ்யத்திலிருந்து அவன் தோன்றுவான், ஆளுகை செய்ய வருவான். அவன் எருசலேமிற்கு சென்றிடுவான், அவன் உரறுதிபடுத்திகிறான், கையெழுத்திடவில்லை, சமாதான உடன்படிக்கை செய்து ஒப்பிட்டான் என்று சொல்லப்படவில்லை, நடைமுறையில் இல்லாத ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதை உறுதிபடுத்திடுவான். தி காம்ப் டேவிட் அக்கார்ட், தி ஆஸ்லோ அக்கார்ட், இஸ்ரேலுக்கும் யோர்தானுக்கும் இடையான சமாதான ஒப்பந்தம் போல, அந்திகிறிஸ்து வரும்போது இருக்கும் சமாதான ஒப்பந்தங்களை அவன் உறுதிபடுத்திடுவான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். போனவாரம் பேசும்போது அந்திகிறிஸ்து ஏற்கனவே பிறந்து பூமியின் ஏதோ ஒரு மூலையில் இருப்பதை நம்புவதாக சொன்னீர்கள். அதை கொஞ்சம் விளக்கி சொல்லுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: அவன் நிச்சயம் உயிரோடு ஆரோக்கியமா இருப்பான், ஏன்னா வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும் நிறைவேறும் நாட்கள், ஜான், அது வந்தாச்சு. அதாவது, ஒரு காரியத்தை எல்லாருக்கும் சொல்லுகிறேன், சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனம் ஒன்றும் இல்லை. தேவனுடைய வார்த்தையில் நிறைவேற வேண்டிய அனைத்து வேதாகம தீர்க்கதரிசனங்களும் சபை எடுத்துக்கொண்ட பிறகு தான் நடக்கும்.

ஐரோப்பிய ஐக்கிய நாடுகளால் அரசியல் அமைப்பில் ஒப்புத்தல் பெறாதவை லிஸ்பான் ஒப்பந்தத்தில், 2007ல் கையெழுத்திட்டனர். இது நடந்தது லிஸ்பானில், போர்டிகு. அந்த லிஸ்பான் உடைபடிக்கையில் ஐரோப்பாவும் அழைக்கப்பட்டிருந்தது – அதில் 27

மாநிலங்கள் உறுப்பினராக இருந்தனர் அதில் இன்னும் பலர் சேர்ந்துகொள்ள முன்வந்தனர், குறிப்பாக மேடிடேரேனியன் ஆகிய நாடுகளின் மாநிலங்களும் பிரான்சின் ஜனாதிபதி ஷார்கொசியும் சமீபத்தில் இணைந்தனர், அவை எல்லாம் ஒன்றாக இணைந்து, இப்போது எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கும்போது 45 வெவ்வேறு மாநிலங்கள் ஒன்றிணைத்திருக்கிறது. அவையனைத்தும் பழைய ரோம ராஜ்யத்தின் எல்லைகளில் இருக்கிறது. உண்மையில், லிபியாவின் கொலோநெல் கடாபி, மேடிடேரேனியன் ஐக்கிய நாடுகள் உருவானபோது அதில் அவர் கலந்துகொள்ளவில்லை அவர், சொல்கிறார், “ஷார்கொசி என்ன செய்ய முயலுகிறார்? பழைய ரோம ராஜ்யத்தை புதுப்பிக்கிறாரா?” ஆமா, அதைதான் அவர் செய்ய முயற்சித்தார்.

நிறுவப்பட்ட இந்த ஒப்பந்தமானது உண்மையில் வலிமையான அரசியலை ஏற்படுத்த, பொருளாதாரம், அரசாங்க பணிகளை வலுபடுத்த, பழைய ரோம ராஜ்யத்தின் எல்லையில் இருந்த பழைய ரோம தலைமையகத்திற்க்கு அழைப்புவிடுத்தனர். ஒரு பலமான தலைமைத்துவத்தை உண்டாக்க முயன்றனர். இதன் தலைவராக இருப்பதற்கு பலவிதமான ஆலோசனைகள் எழும்பின வலிமையான அரசியல், பொருளாதாரம், அரசாங்க செயல்பாடுகள், ஐரோப்பிய ஐக்கிய நாடுகள், இவை புதுப்பிக்கப்பட்ட ரோம ராஜ்யத்தின் உள்கட்டமைப்பாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த நபர், சாத்தானால் பெலப்படுத்தப்படுவான் என்று சொல்லப்படுகிறவன், வெளிப்படுத்தல் 13:2, முன்பாக வந்து, சமாதான உடன்படிக்கையை உறுதிபடுத்திடுவான், வேதம் கூறுகிற அனைத்தையும் அவன் ஒன்று சேர்த்திடுவான், ஆலயத்திற்க்குள்ளும் சென்றிடுவான், யூத ஜனங்களிடம் கட்டும்படிக்கு சொல்லப்பட்ட ஆலயத்திற்குள் சென்றிடுவான். வெளிப்படுத்தல் 11:1-2 உபத்திரவ காலத்தின் மையத்தில் அந்திகிறிஸ்து உட்புகுந்து பாழாக்குகிற அருவருப்பை ஏற்படுத்திடும் தேவாலயமாகிய எருசலேம் நகரத்தில் பர்வதத்தின் மேல் கட்டப்படும் ஆலயத்தை குறித்து கூறுகிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நீங்க இதற்கு முன்னாலையும் சொன்னீங்க, ஜிம்மி, உங்களுடைய நம்பிக்கை அதாவது தேவன் துவங்கிடும்படிக்கு சாத்தான் காத்துக்கொண்டிருக்கிறான், எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவிக்கவேண்டும், அவனுக்கு அது தெரியாது, அந்த காரியத்தில் அவனுக்கு அதிகாரமில்லை, அவன் எப்போதும் அந்திகிறிஸ்துவை இறக்க காத்திருக்கிறான், இயேசு இந்த பூமிக்கு தேவனால் அனுப்பப்பட்டது போல அவனும் ஒருவனை அனுபுகிறான்.

**Dr. ஜிம்மி டியோங்**: ஒன்றை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன், ஜான், நாம் ஒரு தனி நபரை அந்திகிறிஸ்து என்று சொல்லவதில்லை. இந்த மூன்று மனிதர்களும் விலகிவிட்டாலும், ஐரோப்பிய ஐக்கியத்தின் தலைவரான 3 முக்கிய பிரமுகர்கள்,அந்திகிறிஸ்துவின் செயல்களுக்கு ஒப்புதல் அளித்திட வாய்ப்பிருக்கிறது, அவர்களில்லாவிட்டாலும் வேறொருவர் வரமுடியும். சாத்தான் ஒரு தனி நபரை தெரிந்துகொள்கிறான், அது யாராக இருந்தாலும் பிரச்சனையில்லை, சாத்தான் தான் தனது ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ளும் ஒரு நபரை பற்றி யோசிக்கிறான், அவனுக்கு அதிகாரத்தின் ஸ்தானத்தை அளிக்கிறான். அதைதான் 13ம் அதிகாரம் கூறுகிறது. அந்த

மேடை அந்த மனிதனுக்காக வைக்கப்பட்டிருப்பதை பார்க்கிறோம், அவன்தான் அந்தி கிறிஸ்துவாக, தோன்றுவான்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், ஜிம்மி, இப்போது நாம் முத்திரை நியாயதீர்ப்பை பார்க்க துவங்கியுள்ளோம். அடுத்தது இரண்டாவது முத்திரையின் நியாயதீர்ப்பு, இதில் யுத்தத்தையும் பூமியில் நடக்க இருக்கும் கொடுமையானவற்றையும் காண்கிறேன். தேசங்களில் உண்டாக இருக்கும் மாற்றங்களை பற்றியும் நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தீர்கள், அதை இப்போதே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், அதைப்பற்றி விளக்கமாக சொல்லுங்கள். அடுத்த வாரம் பார்க்கபோகிறத்தை பற்றி கொஞ்சம் சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: அதாவது, இயேசுகிறிஸ்து, ஒலிவ மலையில் ஏறிப்போகும்போது, யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேட்ப்பீர்கள் என்றார், தேசத்திற்கு விரோதமாக தேசமும், ராஜ்யத்திற்கு விரோதமாக ராஜ்யமும், ஜனத்திற்கு விரோதமாக ஜனம். அதுதான் உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் சம்பவிக்கப்போகிறது. ரஷ்யா போன்ற தேசங்கள், ஈரான், சீரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சவூதி அரேபியா. இவையனைத்தும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் நாடுகள். தானியேலின் புத்தகம், எசேக்கியேல், சங்கீதத்திலும் சொல்லப்பட்டுள்ளது, அதில் இஸ்ரேல் தேசத்திற்கு விரோதமாக கையெடுக்கும் ஜாதிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைதான் சொல்ல விரும்புகிறேன், ஜான், கடந்த 19 ஆண்டுகளாக மத்திய கிழக்கு தேசத்தில் வாழ்கிறேன், இந்த தேசங்கள் எல்லாம் ஒன்று திரண்டு இஸ்ரேலை தாக்க ஆயத்தமாக இருக்கிறதை பார்க்கிறேன்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். நேயர்களே, தேசங்களின் சீரமைப்பை பற்றி நாம் பேசிட இருக்கிறோம், முத்திரையின் நியாயதீர்ப்புகளையும் பார்க்க இருக்கிறோம், 5 வாரங்களில் வெளிப்படுத்தல் புத்தகத்தை பற்றி உங்களோடு பகிர்ந்திட இருக்கிறோம், தொடர்ந்து நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறோம்.


எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2017 A.T.R.I.